செ.வெ.எண்: 07 நாள்: 03.02.2018

**புதுக்கோட்டை மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா 49வது நினைவுதின சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

புதுக்கோட்டை நகராட்சி, திருவப்பூரில் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் பேரறிஞர் அண்ணா 49-வது நினைவு தின விழா சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.02.2018) நடைபெற்றது.

இந்த பேரறிஞர் அண்ணா நினைவுதின சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:-

புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பல்வேறு கோயில்கள் செயல்பட்டு வருகிறது. இத்திருக்கோயில்களில் ஒவ்வொரு ஆண்டும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவின் நினைவு தினவிழாவை முன்னிட்டு சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியினை நடத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் இன்று (03.02.2018) அறிஞர் அண்ணா அவர்களின் 49வது நினைவு தினத்தை முன்னிட்டு திருவப்பூர் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இதேபோன்று பொது விருந்து மற்றும் சிறப்பு வழிபாடு ஆவுடையார்கோயில் அருள்மிகு ஆத்மநாதசுவாமி திருக்கோயில், கொன்னையூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், இளஞ்சாவூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், திருநல்லூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், அறந்தாங்கி அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில், சித்தக்கூர் அருள்மிகு சேவுகப்பெருமாள் திருக்கோயில், விளானூர் அருள்மிகு பாம்பணியம்மன் திருக்கோயில், நற்பவளக்குடி அருள்மிகு மெய்யர் அய்யனார் திருக்கோயில், கீழ்காத்தி அருள்மிகு காதமறவர் திருக்கோயில், திருப்புனவாசல்

அருள்மிகு விருத்தபுரீஸ்வரர் திருக்கோயில், மணமேல்குடி அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், சிலட்டூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், பெரம்பூர் அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில், திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், ஆலங்குடி அருள்மிகு நாடியம்மன் திருக்கோயில் என மொத்தம் 15 திருக்கோயில்களில் பொதுவிருந்து மற்றும் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது

மேலும், இப்பொது விருந்து நிகழ்ச்சியில் அனைத்து பொதுமக்களும் ஜாதி, மதம், மொழி, இன வேறுபாடின்றி கலந்துகொண்டு சமூக நல்லிணக்கத்தைப் பேணிக் காக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆணையர் திரு.ரமேஷ் (புதுக்கோட்டை திருக்கோயில்கள்), செயல் அலுவலர் திரு.ராமராஜன் (புதுக்கோட்டை), வட்டாட்சியர் திரு.தமிழ்மணி, ஆலய மேற்பார்வையாளர்கள் திரு.ராஜேந்திரன், திரு.மாரிமுத்து, பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**